JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **37/2016** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | வேலுச்சாமி | Village | வாய்க்கால்பாலம், பசுவம்பட்டி,சென்னிமலை |
| Father's Name | பொன்னுசாமி | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 12.01.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். தேதி சரிவர நினைவில் இல்லை. வருடம் 2014 என்று மட்டும் நினைவில் உள்ளது. எனக்கு தெரிந்த நபர் மாரிமுத்து என்பவர் வாகன விபத்து ஏற்பட்டு இறந்து விட்டதாக கூறியதின் பேரில் விபத்து நடந்த இடத்தில் சென்று பார்த்தேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. சென்னிமலை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்றார்கள். என்னை சென்னிமலை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. 2 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

1. 19.11.2014 ம் தேதி மதியம் நானும், என் நண்பர் சக்திவேல் இருவரும் சென்னிமலை to காங்கேயம் ரோட்டில் மளிகை கடைக்கு வந்து கொண்டிருந்த போது எங்களுக்கு தெரிந்த மாரிமுத்து என்பவர் தனது Hero Honda TN 34 A 5293 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து

கொண்டிருந்தவர் மீது எதிரில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 23 BW 0208 என்ற பதிவு கொண்ட வாகனமானது அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் அதன் ஓட்டுநர் ஓட்டி வந்து மாரிமுத்துவின் மீது மோதி விபத்தை உண்டாக்கினார் என்றால் சரியல்ல.

2. மாரிமுத்து தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்ததில் மாரிமுத்துவிற்கு அவரது தலையிலும், நெற்றியிலும், வலது முழங்கால் ஆகிய இடங்களிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததை நானும், சக்திவேலும் பார்த்தோம் என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு மாரிமுத்துவை ஏற்றிக் கொண்டு சென்னிமலை அரசு மருத்துவமனைக்கு நானும், சக்திவேலும் சென்றோம் என்றால் சரியல்ல. மருத்துவர் மாரிமுத்து ஏற்கனவே இறந்து விட்டதாக கூறி மாரிமுத்துவின் பிரேதத்தை பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த போது நாங்கள் உடனிருந்தோம் என்றால் சரியல்ல, மாரிமுத்துவின் அக்கா தெய்வானை புகார் கொடுக்க சென்ற விவரம் எனக்கு தெரியாது. சென்னிமலை காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விவரங்கள் அனைத்தையும் வாக்குமூலமாக கூறிவிட்டு தற்போது தேதி சரிவர நினைவில் இல்லை என்றும், விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை